2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

சொந்தக் கட்டடம்

***53010—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாணியம்பாடியில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இரண்டு மருத்துவர் வகை (Two Doctor Type) *மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு நிலம் வாங்குதல் மற்றும் கட்டடங்கள் கட்டுதல், புது டெல்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தினுடைய பணியாகும். எனவே, மூன்று மருத்துவர் வகை* (Three Doctor Type) *அல்லது அதற்கு மேலான மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமாகக் கட்டுவதற்கு, புது டெல்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் முயற்சிகள் எடுக்க வேண்டும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதற்குண்டான பரிந்துரையைச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக, தமிழன் தன்மானத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி), தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்கின்ற இலட்சியக் கனவோடு, போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்று உழைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

"போற்றுபவர் போற்றட்டும்! புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்! தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை எனதுள்ள மென்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும், நில்லேன்!
அஞ்சேன்! கெஞ்சேன்!"

என்கின்ற இலட்சியத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திவரும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவி, மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டத்தைத் தந்து தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகின்ற, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் தமிழகத்தின் தலைமகள், அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழர் நெஞ்சத்திலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் திராவிட இயக்கத்தின் ஒப்பாரும் மிக்காருமில்லா (மேசையைத் தட்டும் ஒலி) உலகப் பெரும் தலைவர்களின் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு வருகின்றது. வாணியம்பாடி தொகுதியில் மட்டும் 150—க்கும் மேற்பட்ட தோல் தொழிற்சாலைகள், காலணி தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஜவுளித் தொழிற்சாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

2016 ஜனவரி 21]

இந்த மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் 2,500–க்கும் மேல் உள்ளன. நோயாளிகளின் வருகை நாளொன்றுக்கு 600 முதல் 900 வரை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, வாணியம்பாடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகக் கட்டடம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய்த் தங்கள் வாயிலாக அன்புடன் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு திட்டமாகும். தொழிலாளர்களின் சம்பளத்தில் 1.75 சதவிகிதமும், வேலை அளிப்போரிடமிருந்து 4.75 சதவிகிதமும் சேர்த்து வசூலிக்கப்படும் நிதியின்மூலம் தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவில், 7/8 பங்கு தொழிலாளர் காப்புறுதிக் கழகத்தாலும், 1/8 பங்கு மாநில அரசாலும் ஏற்கப்படுகிறது. அந்த வகையிலே, வேலூர் மாவட்டத்தில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்துத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கும் நிலம் தேர்வு செய்து அனுப்பும்படி வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்தவகையில், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், வாணியம்பாடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் அமைப்பதற்கான நிலத்தினை அடையாளம் காட்டுவார்களேயானால், புது டெல்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிந்துரை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் குறு, சிறு தொழிற்சாலைகள் மற்றும் பஞ்சாலைகள் நிறைய இருக்கின்றன; நிறைய தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அங்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் இருக்கிறது. ஆனால், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்தும்கூட, அந்த மருந்தகத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்கு மாநில அரசு, இந்தத் துறை, பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சைக்காக திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து மதுரை மாவட்டத்திற்குத்தான் செல்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு மருத்துவமனையை அமைப்பதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தொழிலாளர் நலத் துறையின் சார்பாக கடந்த நான்கரை ஆண்டுகளிலே மாத்திரம் 33 புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலமாக 1,81,680 தொழிலாளர் குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகிறேன். அதேபோன்று, கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 40 புதிய பகுதிகள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக 47,057 தொழிலாளர் குடும்பங்கள் பயன்பெற்றிருக்கின்றன. திண்டுக்கல் பகுதியிலே அரசு மருத்துவமனை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்குண்டான பரிசீலனையை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*